# தாவீதுடன் தேவனுடைய உடன்படிக்கை

*இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக ... அவர் தம்முடைய பரிசுத்த உடன்படிக்கையை நினைத்தருளி; ... தமது ஜனத்தைச் சந்தித்து மீட்டுக் கொண்டு ... தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு இரட்சணியக் கொம்மை ஏற்படுத்தினார் (லூக். 1:68-75).*

தேவன் தாவீதிடம் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தினார், அதில் ஒரு வாக்குத்தத்தம் அடங்கியிருந்தது, அது இயேசுவால் நிறைவேற்றப்பட்டது. தாவீது தமது இவ்வுலக வாழ்க்கையின் முடிவுக்கு அண்மையில், தேவன் தம்முடன் ஒரு உடன்படிக்கை ஏற்படுத்தியிருந்தார் என்று உரைத்தார் (2 சாமு. 23:5). இது யூத நாட்டின் வரலாற்றினுடைய வீழ்ச்சி பற்றிய ஒரு விபரத்தில், 2 நாளா. 21:7ல் கூடக் குறிப்பிடப்பட்டுள்ளது. உடன்படிக்கை பற்றிய தேவனுடைய கூற்றுக்களைத் தாவீது சங். 89ல் பதிவு செய்தார்:

என்னால் தெரிந்துகொள்ளப்பட்டவனோடே உடன்படிக்கை பண்ணி,
என் தாசனாகிய தாவீதை நோக்கி:
என்றென்றைக்கும் உன் சந்ததியை நிலைப்படுத்தி,
தலைமுறை தலைமுறையாக உன் சிங்காசனத்தை ஸ்தாபிப்பேன் என்று ஆணையிட்டேன் (வ. 3, 4).

என் கிருபையை என்றென்றைக்கும் அவனுக்காகக் காப்பேன்;
என் உடன்படிக்கை அவனுக்காக உறுதிப்படுத்தப்படும்.
அவன் சந்ததி என்றென்றைக்கும் நிலைத்திருக்கவும்,
அவன் ராஜாசனம் வானங்களுள்ளமட்டும் நிலைநிற்கவும் செய்வேன் (வ. 28, 29).

என் உடன்படிக்கையை மீறாமலும், என் உதடுகள் விளம்பினதை மாற்றாமலும் இருப்பேன்.
ஒரு விசை என் பரிசுத்தத்தின் பேரில் ஆணையிட்டேன், தாவீதுக்கு நான் பொய்சொல்லேன்.
அவன் சந்ததி என்றென்றைக்கும் இருக்கும்;
அவன் சிங்காசனம் சூரியனைப்போல எனக்கு முன்பாக நிலைநிற்கும் (வ. 34-36).

*தாவீதின் அரசினுடைய நீடித்து நிற்கும் இயல்பு பற்றி அவருக்கு நாத்தான் உறுதிப்படுத்தியிருந்தார் (2 சாமு. 7:13, 16). ஆளுபவர் பெத்லகேமிலிருந்து வருவார் என்று மீகா தீர்க்கதரிசனம் உரைத்திருந்தார் (மீகா 5:2). மனுஷகுமாரன் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து அவரிடத்தில் என்றென்றும் அழியாத ஒரு ராஜ்யத்தைப் பெற்றுக்கொண்ட தாகத் தானியேல் தரிசனம் ஒன்றில் கண்டிருந்தார் (தானி. 7:13, 14). ஏசாயாவும் கூட தாவீதின் அரியணையில் வீற்றிருந்து ஆளப் போகிறவர் குறித்துப் பேசியிருந்துள்ளார் (ஏசா. 9:6, 7).*

*இந்தத் தீர்க்கதரிசனங்கள் அவைகளின் நிறைவேற்றத்தை யூதாவின் கோத்திரத்தில் தாவீதின் வம்சத்தில் தோன்றிய இயேசுவுக்குள் பெற்றுள்ளன. யாக்கோபு தமது மகன்களை ஆசீர்வதிக்கையில் செங்கோல் யூதாவை விட்டு நீங்காது என்று தீர்க்கதரிசனம் உரைத்திருந்தார் (ஆதி. 49:10). தாவீதுக்குத் தொடர்புடைய மற்ற தீர்க்கதரிசனங்கள், தாவீது தேவனுடைய மக்களின் மீது[1] ஆளுகை செலுத்தியது போலவே அவரது சந்ததியிலிருந்து வரும் ஒரு அரசரும் அவர்கள் மீது ஆளுகை செலுத்துவார் என்று சுட்டிக்காட்டின.*

*காபிரியேல் தூதன் இயேசுவைப் பற்றி மரியாளுக்குத் தான் கொடுத்த அறிவிப்பில் இந்தத் தீர்க்கதரிசனங்களை இயேசுவுடன் தொடர்பு படுத்தினார்: "அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது" (லூக். 1:32, 33).*

*இயேசு பிதாவின் வலது பாரிசத்திற்கு ஏறிச் சென்று, எல்லாம் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தப்பட்ட பொழுது இது யாவும் நிறைவேற்றப்பட்டது.[2] அது தொடங்கி, இயேசு வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் உள்ளவராக இருந்து வருகின்றார் (மத். 28:18). தங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டவர்கள் இருள் மற்றும் சாத்தானு டைய அதிகாரத்தினின்று விடுதலையாக்கப்பட்டு இயேசுவின் இராஜ்யத்தினுள் பிரவேசிக்கின்றனர் (அப். 2:38; 26:18; கொலோ. 1:13).*

*இயேசு மேசியாவாக, கிறிஸ்துவாக (யோவா. 1:41; அப். 2:36) இருக்கின்றார். இப்பொழுது அவர் அரசாளுவதால் நாம் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும், இல்லையென்றால் நாம் அழிக்கப்பட்டு விடுவோம் (அப். 3:23).*

*தேவன் தாவீதுடன் ஏற்படுத்திய உடன்படிக்கையானது இயேசுவில் நிறைவேற்றப்பட்டது. இந்த உடன்படிக்கையின்படியாக, ஆளுபவரான இயேசுவைத் தேவன் தாவீதின் அரியணையில் அமர்ந்து அவருடைய (தேவனுடைய) மக்களை ஆளும்படி நியமித்தார். இயேசுவை அனுப்பியதில் தேவன் தாவீதுடனான தம்முடைய உடன்படிக்கையைக் காத்துக் கொண்டார்.*

குறிப்புகள்

[1]எரே. 23:5; 30:9; 33:15; எசே. 34:23, 24; 37:24, 25; ஓசி. 3:5; சக. 12:10 ஆகியவற்றைக் காணவும். [2]மாற். 16:19; அப். 2:34, 35; 1 கொரி. 15:27; எபே. 1:19-23; 1 பேது. 3:22 ஆகியவற்றைக் காணவும்.

## தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஒரு உடன்படிக்கை

ஆதி. 9ல், பெருவெள்ளத்தைத் தொடர்ந்து, தேவன் நோவாவிடத்தில் அவருடனும் அவருடைய சந்ததிகளுடனும் (வ. 9), மற்றும் சகல உயிரினங்களுடனும் (வ. 10) ஒரு உடன்படிக்கையை நிலைநாட்டுவதாக அறிவித்தார். தேவன், "இனி மாம்சமானவைகளெல்லாம் ஜலப்பிரளயத்தினால் சங்கரிக்கப்படுவதில்லை என்றும், பூமியை அழிக்க இனி ஜலப்பிரளயம் உண்டாவதில்லையென்றும், உங்களோடே என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன்" (வ. 11) என்றார்.

மேலும், தேவன் அந்த உடன்படிக்கையை முத்திரையிட ஒரு அடையாளத்தைக் கொடுத்தார்: "எனக்கும் உங்களுக்கும், உங்களிடத்தில் இருக்கும் சகல ஜீவஜந்துக்களுக்கும், நித்திய தலைமுறைகளுக்கென்று நான் செய்கிற உடன்படிக்கையின் அடையாளமாக நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்; அது எனக்கும் பூமிக்கும் உண்டான உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும்'' (வ. 12, 13). மேகங்கள் பூமியை மூடும் பொழுதெல்லாம் வானவில் காணப்படும் என்று தேவன் வாக்குத்தத்தம் செய்தார். அவர் மனித வார்த்தைப் பதங்களில், "அந்த வில் மேகத்தில் தோன்றும் பொழுது, தேவனுக்கும் பூமியின் மேலுள்ள சகல விதமான மாம்ச ஜீவன்களுக்கும் உண்டான நித்திய உடன்படிக்கையை நான் நினைவுகூரும்படிக்கு அதை நோக்கிப் பார்ப்பேன்'' என்று விளக்கம் அளித்தார் (வ. 16).

நோவாவைப் பொறுத்தமட்டில், இந்த உடன்படிக்கையானது இரு சாராருக்கிடையே உண்டான ஒரு ஒப்பந்தத்தின் விஷயமாய் இருந்ததில்லை. அந்த உடன்படிக்கையானது தேவனால் ஏற்படுத்தப்பட்ட நிபந்தனையற்ற, அகில உலகளாவியதாக இருந்தது.